இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 326 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆனி 21 – வியாழக்கிழமை 06 ஜூலை 2023 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 326 : Thiruvalluvar Year - 2054 - Aani 21 - Thursday 06 July 2023 - Chennai 16 Pages ₹ 5.00


### முதல்வர் மு.க.ஸ்டாலின் நடவடிக்கை: போக்குவரத்து நெரிசலை குறைக்க

# சென்னை தேனாம்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரை உயர்மட்ட மேம்பாலம்!

## ரூ.621 கோடி ஒதுக்கீடு - அரசாணை வெளியீடு!

**சென்னை, ஜூலை 6 -**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி சென்னை தேனாம்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரை உயர்மட்ட மேம்பாலம் அமைய இருக்கின்றன. இதற்காக ரூ.621 கோடி ஒதுக்கீடு செய்து தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.**



சென்னை அண்ணா சாலை சுமார் 400 ஆண்டுகள் பழமை வாய்ந்தது. இந்த சாலையில் காலை, மாலை என எப்போதும் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கும். மேலும் இந்த சாலையிலேயே ராணுவத்தின் தென்மண்டல தலைமையகம், ஓமந்தூரார் மருத்துவமனை, எல்.ஐ.சி., அமெரிக்க துணைத் தூதரகம், சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத் துறை, கணக்கு தணிக்கை அலுவலகம், அண்ணா அறிவாலயம், நட்சத்திர விடுதிகள், பனகல் மாளிகை உள்ளிட்ட பல்வேறு அரசு மற்றும் தனியார் அலுவலகங்கள் உள்ளன.

இந்த சாலையில் தேனாம்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரை 3.5 கி.மீ. நீளத்தைக் கடக்கவே சராசரியாக ஒரு மணிநேரம் ஆகின்றது.

**போக்குவரத்து நெரிசலுக்குத் தீர்வு!**

இதனால் நந்தனம் சந்திப்பு, சி.ஐ.டி நகர் சந்திப்பு, எல்டாம்ஸ் சாலை சந்திப்பு ஆகியவற்றால் காலை, மாலை வேளைகளில் வாகனங்கள் அணிவகுத்து நிற்கின்றன. இந்தப் போக்குவரத்து நெரிசலுக்குத் தீர்வு காணும் வகையில் தேனாம்பேட்டையிலிருந்து சைதாப்பேட்டை வரை உள்ள முக்கிய சாலை சந்திப்புகளான எல்டாம்ஸ் சாலை சந்திப்பு, தியாகராயர் நகர் சாலை சந்திப்பு, டி.டி.கே. சாலையை அண்ணா சாலையுடன் இணைக்கும் எஸ்.ஐ.இ.டி. கல்லூரி சாலை சந்திப்பு, செனடாப் சந்திப்பு, கோட்டூர்புரம், போட்கிளப், பசுமை வழிச்சாலை வெங்கட்நாராயாணா சாலையிலிருந்து வரும் வாகனங்கள் அண்ணா சாலையை வந்தடையும் நந்தனம் சந்திப்பு, சி.ஐ.டி. நகர் 3வது மற்றும் முதல் பிரதானச் சாலை சந்திப்பு, சைதாப்பேட்டையிலுள்ள தாடண்டர் நகர், ஜோன்ஸ் சாலை சந்திப்பு ஆகியவை முக்கிய சாலை சந்திப்புகளாக உள்ளன.

**4 வழி மேம்பாலம்!**

இந்நிலையில் அண்ணா சாலையில் நாள்தோறும் அதிகரித்துவரும் போக்குவரத்தினால் பொதுமக்கள் பெரும் அவதிக்குள்ளாகி வருகிறார்கள். இதை கருத்தில்கொண்டு தமிழக நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ.வேலு சட்டமன்றத்தில் அண்ணா சாலையின் போக்குவரத்து நெரிசலை குறைக்க சைதாப்பேட்டை முதல் தேனாம்பேட்டை வரையிலான 3.5 கி.மீ தொலைவு உயர்மட்ட மேம்பாலம் அமைக்கப்படும் என்று அறிவித்தார்.



மேலும், வரும் ஆண்டில் ரூ.621 கோடி மதிப்பீட்டில் தேனாம்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரை அண்ணா சாலையில் 4 வழி மேம்பாலம் கட்டப்படும்.

பன்னாட்டு பொறியியல் நிபுணர்களின் ஆலோசனைகள் பெற்று சென்னை மெட்ரோ ரயில் சுரங்கப் பாதைகளுக்கு மேல் கட்டப்பட உள்ள இந்த மேம்பாலம் ஒரு நவீன பொறியியல் சாதனையாக அமையும். இப்பணிகள் நிறைவுற்றவுடன், பல முக்கிய சந்திப்புகளில் போக்குவரத்து நெரிசல் குறைந்து சாலைப் பாதுகாப்பும் மேம்படும் என சட்டமன்ற கூட்டத் தொடரில் அறிவிக்கப்பட்டது. இதனிடையே நீண்ட காலமாக நிலுவையில் உள்ள அண்ணா சாலை மேம்பாலம் அமைக்கும் பணியை இந்தாண்டு நவம்பர், டிசம்பர் மாதத்திற்குள் மாநில நெடுஞ்சாலைத்துறை மேற்கொள்ளப் படும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

இதுகுறித்து நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகள் கூறியதாவது: -

தினசரி 2.5 லட்சம் வாகனங்கள் செல்லும் வகையில் உயர்த்தப்பட்ட நான்கு வழிச்சாலை வடிவமைக்கப் பட்டுள்ளது. இதன் மூலம் அண்ணா சாலையை கடக்க 45 நிமிடங்களிலிருந்து 5 நிமிடங்களாகக் குறைக்கப் படும். இந்த பாலம் மாதிரி 3டி முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதற்கு சவாலாக இருந்த மெட்ரோ ரயில் சுரங்கத்திற்கு பாதிப்பு ஏற்படாமல், உயர்மட்ட பாலம் அமைவதற்கு வலுவான தூண்கள் எவ்வாறு கட்டப்படும் உள்ளிட்ட திட்டத்திற்கான சாத்தியக்கூறு ஆய்வறிக்கை கடந்த மாதத்திற்கு முன்பே தமிழ்நாடு அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இன்னும் ஓரிரு மாதங்களில் திட்ட அறிக்கைக்கான ஒப்புதல் கிடைக்கும் என எதிர் பார்க்கப்படுகிறது.

ஒப்புதல் கிடைத்தவுடன் மேம்பாலப் பணிகள் நவம்பர், டிசம்பர் மாதத்திற்குள் மேற்கொள்ளப்படும். மேலும், அண்ணா அறிவாலயத்தில் தொடங்கி சைதாப்பேட்டை அடையாறு பாலத்திற்கு அருகில் முடிவடைய உள்ளது என்றனர்.

இந்நிலையில், தேனாம்பேட்டை, எல்டாம்ஸ் சாலை, எஸ்.ஐ.இ.டி. கல்லூரி சந்திப்பு, நந்தனம் சந்திப்பு ஆகியவற்றைக் கடந்த சைதாப்பேட்டை பேருந்து நிலையம் வரை உயர்மட்ட சாலை அமைக்க 621 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளரின் பரிந்துரையை ஏற்று இந்த அரசாணை வெளியிடப்படுவதாகவும் தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.

---

### அரசு மருத்துவமனைக்கு

## மருத்துவர்கள் குறித்த நேரத்திற்கு வருகை தரவேண்டும்!

### துறை செயலாளர் கடிதம்!

*சென்னை, ஜூலை 6 -*

*அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவர்கள் குறித்த நேரத்திற்கு வருவதை உறுதி செய்ய வேண்டும் என அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் மக்கள் நல்வாழ்வுத்துறை செயலாளர் கடிதம் எழுதியுள்ளார்.*

*மக்கள் நல்வாழ்வுத்துறை செயலாளர் ககன்தீப் சிங் பேடி, அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் சுற்றறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளார். (GFX IN) அதில், அரசு மருத்துவமனைகள், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் மருந்தகங்களில் ஆதார சேவைகளை பெறுவதில் தாமதம் ஏற்படுவதாக புகார்கள் பெறப்படுவதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.*

*அரசு மருத்துவமனை முதல்வர்கள், இயக்குநர்கள், சுகாதார பணியாளர்கள் வெளிநோயாளிகளுக்கான நேரத்தை கட்டாயமாக கடைபிடிக்க வேண்டும் என்றும், மருத்துவ கண்காணிப்பாளர் அவசரகால அடிப்படையில் 24 மணி நேரமும் பணியில் இருக்க வேண்டும் என அதில் குறிப்பிடப் பட்டுள்ளது.*

*மேலும், அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவர்கள் குறித்த நேரத்திற்கு வர வேண்டும் என்றும், வெளி நோயாளிகளுக்கு காலை 7:30 முதல் 12மணிவரை சிகிச்சை அளிக்க வேண்டும் என்றும் இதனை மாவட்ட ஆட்சியர்கள் கண்காணிக்கவேண்டும் என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

---

### பா.ஜ.க. ஆட்சியில் பழங்குடியின

## பெண்கள் மீது வன்கொடுமை அதிகரிப்பு!

### ராகுல் காந்தி குற்றச்சாட்டு!

*புதுடெல்லி, ஜூலை 6 -*

*மத்திய பிரதேச மாநிலம் சித்தி தொகுதியின் பா.ஜ.க. எம்.எல்.ஏ. கேதார் நாத் சுக்லாவின் பிரதிநிதியான பிரவேஷ் சுக்லா என்பவர் மது போதையில், மனநலம் பாதிக்கப்பட்ட பழங்குடியின இளைஞர் மீது சிறுநீர் கழித்துள்ளார். இதுதொடர்பான வீடியோ வெளியாகி அதிர்வலையை ஏற்படுத்தியது.*

*இந்நிலையில் பா.ஜ.க. ஆட்சியில் பழங்குடியின சகோதர சகோதரிகள் மீதான வன்கொடுமைகள் அதிகரித்து வருவதாக காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.*

*இதுதொடர்பாக அவர் தனது டுவிட்டரில், “பா.ஜ.க. ஆட்சியில் பழங்குடியின சகோதர சகோதரிகள் மீதான வன்கொடுமைகள் அதிகரித்து வருகின்றன. மத்திய பிரதேசத்தில் பா.ஜ.க. தலைவர் ஒருவரின் மனிதாபிமானமற்ற குற்ற செயலால் ஒட்டுமொத்த மனித குலமே அவமானமடைந்துள்ளது. பழங்குடியினர் மற்றும் தலித்துகள் மீதான பாஜகவின் வெறுப்பின் கேவலமான முகமும் உண்மையான குணமும் இதுதான்!” என்று அதில் ராகுல் காந்தி இந்தியில் பதிவிட்டுள்ளார்.*

---

### பேராசிரியர் பணிக்கு

## முனைவர் பட்டம் கட்டாயம் கிடையாது!

### பல்கலைக் கழக மானியக் குழு அறிவிப்பு!

*சென்னை, ஜூலை 6 -*

*பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் உள்ளிட்ட உயர்கல்வி நிலையங்களில் உதவிப் பேராசிரியர் பணிக்கு முனைவர் பட்டம் கட்டாயம் என்ற விதி ரத்து செய்யப்படுவதாக பல்கலைக்கழக மானியக் குழு அறிவித்துள்ளது.*

*சில ஆண்டுகளுக்கு முன் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளில் உதவிப் பேராசிரியர்களாகப் பணி புரிவோருக்கு பி.ஹெச்டி., பட்டம் கட்டாயம் என யு.ஜி.சி. விதிமுறையில் திருத்தம் கொண்டு வரப்பட்டது.*

*இந்த திருத்தம் 2021 - 2022ஆம் கல்வியாண்டில் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் அறிவிக்கப் பட்டது.*

*கல்வி மற்றும் கற்பித்தலில் தரத்தை உயர்த்தும் நோக்கில் இந்த புதிய நடைமுறை அமல்படுத்தப் பட உள்ளதாகவும் யு.ஜி.சி. அறிவித்திருந்தது.*

*பின்னர், முனைவர் பட்டம் கட்டாயம் என்ற திருத்தப்பட்ட விதிமுறை 2023ஆம் ஆண்டு ஜூலை வரை ஒத்திவைக்கப்படுவதாக பல்கலைக்கழக மானியக் குழு அறிவித்தது.*

*இந்நிலையில், பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் உள்ளிட்ட உயர்கல்வி நிலையங்களில் உதவிப் பேராசிரியர் பணிக்கு முனைவர் பட்டம் கட்டாயம் என்ற விதியை ரத்து செய்வதாக பல்கலைக் கழக மானியக் குழு அறிவித்துள்ளது. ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசுகள் நடத்தும் NET/SET/SLET தேர்வுகளில் தேர்ச்சி பெறுவது உதவிப் பேராசிரியர் பணிக்கு விண்ணப்பிக்க குறைந்தபட்ச கல்வித் தகுதியாக கொள்ளலாம் என்றும் யு.ஜி.சி. வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

---

### தமிழ்நாட்டிற்கான பங்கீட்டு நீரை கர்நாடக அரசு விடுவிக்கச் செய்ய

# காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தை வலியுறுத்துக!

## ஒன்றிய அமைச்சரிடம் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஜூலை 6-

காவிரி நதியிலிருந்து தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய தண்ணீரை உடனடியாக வழங்க வேண்டி புதுடெல்லியில் நேற்று 05.07.2023 ஒன்றிய அரசின் நீர்வளத் துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் அவர்களை தமிழ்நாடு அரசின் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் சந்தித்தார்.

புதுடெல்லியில் நேற்று 05.07.2023 ஒன்றிய அரசின் நீர்வளத் துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் அவர்களை தமிழ்நாடு அரசின் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் சந்தித்து காவிரி நதியிலிருந்து தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய தண்ணீரை உடனடியாக வழங்க வேண்டும் என்றும் மேகதாது அணையினை கட்டக்கூடாது என்றும் வலியுறுத்தி கோரிக்கை மனுவினை வழங்கினார்.

அந்த மனுவில் குறிப்பிட்டுள்ளதாவது:

ஜூன் மற்றும் ஜூலை 3ஆம் தேதி வரை 12.213 டி.எம்.சி அடி தண்ணீர் தமிழ்நாட்டிற்கு கிடைத்திருக்க வேண்டும். ஆனால், இது வரை 2.993 டி.எம்.சி அடி தண்ணீர் தான் வரப்பெற்றுள்ளது. 9.220 டி.எம்.சி அடி தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனால், காவிரி டெல்டா பகுதியில் பயிரிடப்பட்டுள்ள பயிர்கள் எல்லாம் உலர்ந்துபோய்விடும்.



புதுடெல்லில் நேற்று (5.7.2023) ஒன்றிய அரசின் நீர்வளத்துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் அவர்களை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் சந்தித்து காவிரி நதியில் இருந்து தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய தண்ணீரை உடனடியாக வழங்க வேண்டும் என்றும், மேகதாது அணையினை கட்டக்கூடாது என்றும் வலியுறுத்தி கோரிக்கை மனுவினை வழங்கினார். தமிழ்நாடு அரசின் புதுடெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன் மற்றும் நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சந்தீப் சக்சேனா, ஆகியோர் உடனிருந்தனர்.

ஆகையினால், உச்சநீதிமன்றத்தின் ஆணையின்படி, கர்நாடக அரசு, தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய உரிய பங்கீட்டு நீரினை உடனடியாக வழங்குவதை உறுதி செய்வது காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் பொறுப்பாகும்.

எனவே, ஒன்றிய அரசின் நீர்வளத் துறை அமைச்சர் அவர்களை தமிழ்நாட்டிற்கு அளிக்க வேண்டிய உரிய பங்கீட்டு நீரினை கர்நாடக அரசு உடனடியாக விடுவிக்க காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தை வலியுறுத்துமாறு கேட்டுக்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து ஒன்றிய அமைச்சர் அவர்கள் ஒன்றிய அரசின் இணைச் செயலாளரை அழைத்து இது தொடர்பாக காவிரி நீர் மேலாண்மை ஆணையத்துடன் கலந்தாலோசித்து உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தியுள்ளார்.

இச்சந்திப்பின்போது, தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன் மற்றும் நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சந்தீப் சக்சேனா ஆகியோர் உடன் இருந்தனர்.

---

## கேரளாவில் கனமழை நீடிப்பு!

*திருவனந்தபுரம், ஜூலை 6 -*

*கேரள மாநிலத்தில் தென்மேற்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ளது. கடந்த சில நாட்களாக பல மாவட்டங்களில் கனமழை முதல் மிக கனமழை வரை பெய்து வருகிறது. மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில் இன்று வரை கனமழை நீடிக்கும் என இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்திருந்தது.*

*கனமழை நீடிப்பதால் கேரள மாநிலத்தில் உள்ள அனைத்து அணைகளின் நீர் மட்டமும் உயர்ந்து வருகிறது. இதனால் பெரியாறு, முத்திரபுழா ஆற்றின் கரையோரங்களில் வசிப்பவர்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கேரள மாநிலத்தில் வருகிற சனிக்கிழமை வரை மோசமான வானிலையே நீடிக்கும் என்று இந்திய வானிலை மையம் அறிவித்துள்ளது. பத்தினம் திட்டா, ஆலப்புழா, கோட்டயம், இடுக்கி, எர்ணாகுளம், திருச்சூர், பாலக்காடு, மலப்புரம், கோழிக்கோடு, வயநாடு, கண்ணூர், காசர்கோடு ஆகிய 12 மாவட்டங்களுக்கு ஆரஞ்சு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.*

*கொல்லம் மாவட்டத்திற்கு மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.*